# நெல் தூற்ற ஒரு கருவி

காற்றுள்ளபோதே  தூற்றிக் கொள் என்ற ஒரு பழமொழி சொல்வார்கள் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். ஆனால், இன்றைய  அவசர உலகத்தில் காற்ற வீசும் வரை காத்திருந்து நெல் தூற்றுவதற்கெல்லாம் நேரமே இல்லையே! என்று யோசித்த விழுப்புரம் மாவட்டம், பெரிய நொலம்பை கிராமத்தைச் சேர்ந்த சந்திரசேகரன், நெல் தூற்றும் இயந்திரம் ஒன்றையே வடிவமைத்துவிட்டார்.

சென்னையில் நடந்த கண்காட்சி ஒன்றில், தொழிற்சாலைகளில் காற்றை வெளியேற்றுவதற்காக பயன்படுத்தும் காற்றாடி ஒன்றைப் பார்த்த சந்திரசேகரனுக்கு, இதில் சின்னச் சின்ன மாற்றங்கள் செய்தால், நெல்லைத் தூற்ற முடியுமோ! என்றொரு பொறி கிளம்ப, உடனடியாகக் களத்தில் இறங்கி. அதை வடிவமைத்து முடித்தே விட்டார்.  இவர் தமிழக விவசாயிகள் விழிப்பு உணர்வு சங்க நிறுவனத் தலைவராகவும் இருக்கிறார்.

அதைப் பற்றி பேசிய சந்திரசேகரன், ‘எங்கப்பா, மின்சாரத் துறையில் வேலை செய்தால் சின்ன வயதில் இருந்தே மின் கருவிகள் மேல் எனக்கு ஆர்வம் அதிகம். அப்பப்ப எதையாவது செய்துகிட்டே இருப்பேன். விவசாயம்தான் முழுநேரத் தொழில்ங்கறதால், அந்த மெக்கானிக் மூளையைப் பயன்படுத்தி, விவசாயத்துக்கு உபயோகமா இந்தக் கருவியை வடிவமைச்சிருக்கேன்.

பழைய கிரிஸ் பேரல், லாரியில் பயன்படும் ரேடியேட்டர் ஃபேன், ஒரு மோட்டார், கொஞ்சம் இரும்புப் பட்டைகள்.. இவ்வளவுதான் அந்தக் கருவி. சாதாரணக் காற்றாடி மாதிரிதான். யார் வேணும்னாலும் தயாரிச்சுக்க முடியும். அரை ஹெச்.பி. மோட்டார் பயன்படுத்துறப்போ.. மூன்று மணி நேரத்திற்கு ஒரு யூனிட் மின்சாரம்தான் செலவாகும் என்றவர், அதை வடிவமைக்கும் முறைகளைக் கோடிட்டுக் காட்டிவிட்டு , இயந்திரத்தை ஓடவிட்டு நெல்லை தூற்றியபடியே,

இதைப் பயன்படுத்தி நெல், உளுந்துனு எல்லா வகை தானியத்தையும்  தூற்றி சுத்தப்படுத்தலாம். 30 மூட்டை நெல்லை இந்தக் கருவியைப் பயன்படுத்தி தூற்றதுக்கு மூன்று ஆள் இருந்தாலே போதும். இரண்டு மணி நேரத்தில் வேலையை முடிச்சிடலாம். கூலியோ 600 ரூபாய்தான் கொடுக்க வேண்டியிருக்கும். இதையே வழக்கமான பாணியில் தூற்றினால், ஐந்து ஆள் தேவைப்படும். 1,350 ரூபாய் வரைக்கும் கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்தக் கருவியைத் தயாரிக்க, அதிகபட்சம் 3,000 ரூபாய் செலவாகுது. எங்க பகுதியில் இருக்கும் பல விவசாயிகளுக்க இந்தக் கருவியை நான் செய்து கொடுத்திருக்கிறேன் என்றார்.

இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி வரும் அதே ஊரைச் சேர்ந்த பாலசுப்ரமணியன். பத்து ஏக்கரில் நெல்லு விவசாயம் தனர் பார்க்கிறேன். ஆள் பற்றாக்குறை இருக்கும் இந்தக் காலத்தில் இந்த நெல் தூத்தற மெஷின் எனக்குக் கிடைத்த வரம் என்றுதான் செலர்லணும். ஆறு வருடமாக இதைப் பயன்படுத்தித்தான் நெல்லை தூற்றிக்கொண்டிருக்கிறேன். பிரச்சினையில்லாமல் போய்க்கிட்டிருக்கு என்றார்.

**தொடர்புக்கு**

சந்திரசேகரன், அலைபேசி : 93605-64370

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 10.05.11 www.vikatan.com